# 8

# ஆன்மீக வளர்ச்சி



# SPIRITUAL GROWTH

# 8

## எப்படி வளரக்கூடாது?

HOW NOT TO GROW

**1**

தானாகவே வளர்ச்சி ஏற்படுமென எதிர்பார்க்கக்கூடாது.

**2**

அடித்தளத்திலேயே நின்றுவிடக்கூடாது.

**3**

சரிவிகிதமின்றி வளரக்கூடாது. (பகுதி 1)

**4**

சரிவிகிதமின்றி வளரக்கூடாது. (பகுதி 2)

**5**

கடினமான பகுதிகளைத் தவிர்த்துவிடக்கூடாது.

**6**

இன்னல்களைத் தடங்கல்களாய்க் கருதக்கூடாது.

**7**

கூட்டு வளர்ச்சியை அலட்சியப்படுத்தக்கூடாது.

**8**

அளவுக்காகத் தரத்தைத் தியாகம்பண்ணக்கூடாது.

**9**

நேரான பாதையிலிருந்து வழிவிலகக்கூடாது.

**10**

வளருவதை ஒருபோதும் நிறுத்தக்கூடாது.

# 8 எப்படி வளரக்கூடாது?

## அறிமுகவுரை

- குழந்தைப் பருவம் பரவசமூட்டுவதாயிருந்தாலும்,
  தங்கள் பிள்ளைகள் குழந்தைகளாகவே இருப்பதை எவரும் விரும்பார்.
  விண்ணகத் தந்தையும் அப்படியே.
  குழந்தைகளாகவே நாம் நீடிப்பது அவருக்கு மன உளைச்சல்!

  பைபிள் திரும்பத் திரும்பச் சொல்லுவது:

  *''குழந்தைகளாயிராதேயுங்கள்''* (1 கொரி 14:20; எபே 4:14அ)

  எபிரெய நிருப ஆக்கியோன் நீடிக்கும் குழந்தைப் பருவத்திற்காய்ப் புலம்பினான் — எபி 5:12,13

  வெறும் வளர்ச்சியல்ல, பூரண வளர்ச்சியே இறைச்சித்தம் —
  எபே 4:11 ... *பூரணராகும்வரை* ...
  *''நாம் **அனைவரும்**''*—தேவப் பிள்ளை ஒவ்வொருவனும்

- ஆன்மீகக் குள்ளர்களால் திருச்சபை நிறைந்திருப்பதே இன்றைய சோகம்; இவர்களுக்கு மூளை வளர்ச்சியும் குறைவு —

  அதாவது, அவர்களுக்கு அறிவுடன் சிந்திக்கவே தெரியாது.

  இதற்கு ஒரு முக்கிய காரணம், வளர்ச்சிக்கான வேதாகம வழிமுறைகள் கற்பிக்கப்படவில்லை. இதைச் சாதகமாக்கிய சாத்தான் மக்களது வளர்ச்சியைக் குறுக்கி, கோணலாக்கிவிட்டான்.

- ஆன்மீக வளர்ச்சி —
  ஒரு பக்கம்: நமது சிலாக்கியம்
  மறு பக்கம்: நமது பொறுப்பு

  நமது வளர்ச்சிக்காய்த் தேவன் தந்துள்ளவை நமது சிலாக்கியம்; அவற்றை நாம் பயன்படுத்தும் விதம் நமது பொறுப்பு.

☐ தேவனது பங்கு: ஓசி 11:1,3,4

*''எப்பிராயீமை நடக்கப் பழக்கினேன் ... பராமரித்தேன்''*

☐ மனிதனது பங்கு: வச 12

*''எப்பிராயீமர் ... பொய் ... இஸ்ரவேல் ... வஞ்சகம் ... யூதாவோ''*

■ நாம் வளர்ந்து தேவப் பிள்ளைகள் ஆவதில்லை;
தேவப் பிள்ளைகளாக முதிர்ச்சி நோக்கி வளருகிறோம்.

நாம் வளர்ந்து நீதிமான்கள் ஆவதில்லை;
விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டு நீதிநெறியில் வளருகிறோம்.

நாம் வளர்ந்து பரிசுத்தவான்கள் ஆவதில்லை;
பரிசுத்தவான்களாகப் பரிசுத்தத்தில் வளருகிறோம்.

அதாவது, வளர்ச்சி என்பது நமது ''நடையில்''தான் (state),
நமது ''நிலையில்'' (standing) அல்ல

நமது வளர்ச்சியை வைத்து தேவன் நம்மை அங்கீகரிப்பதில்லை;
அவர் நம்மைப் பயன்படுத்துவதையோ அது அதிகரிக்கும்.

## எப்படி வளரக்கூடாது?

### 1. தானாகவே வளர்ச்சி ஏற்படுமென எதிர்பார்க்கக்கூடாது.
Do not expect to grow automatically.

■ மறுபிறப்பு ஒரு தெய்வீக அனுபவம் —
1 பேது 1:23
தேவ வல்லமையால்
தேவ வசனத்தால்
தேவ குமாரன் நம்மை இரட்சிக்கிறார்.

பிறப்பு என்பது **தேவனிடமிருந்து** வரும் அற்புதம்;
வளர்ச்சி என்பதோ **நமது** பொறுப்பு.

நமது உடலின் வலிமைக்காய் உடற்பயிற்சி செய்வதுபோல,
நமது உள்ளான மனிதனின் ஆரோக்கிய வளர்ச்சிக்காய்
ஆன்மீகப் பயிற்சிகள் செய்யவேண்டும் —

1 தீமோ 4:8 ... *பூவுலக வாழ்வுக்கும் ... நித்திய ஜீவனுக்கும் ...*
:9 ... *''உண்மையுள்ள வார்த்தை''*

இரட்சிப்பைக் குறித்துப் பேசும்போதும் பவுல் இப்படிச் சொன்னான் —
1 தீமோ 1:15 ... *''உண்மையுள்ள வார்த்தை''*

ஆன்மீகப் பயிற்சியின் முக்கியத்துவம் இதனால் தெளிவு.

■ *''தெய்வீக சுபாவத்தில்''* நாம் பங்குபெறுவோம் என்று
ஆண்டவர் மகிமையான வாக்குகள் தந்துள்ளார் —
2 பேது 1:4

ஆனால் நாம் செய்யவேண்டிய வீட்டுப்பாடமும் இங்குண்டு —
வச 5-8 ... ''*இப்படியிருக்க, கூட்டுங்கள்* + + + + + + +''
அப்பொழுதுதான் *கனியற்று* இருக்கமாட்டோம் (வச 8)

இறைவாக்குகளை விசுவாசித்துக்கொண்டிருந்தால் மட்டும் போதாது.
செங்கல் மேல் செங்கல் வைத்துக் கட்டவேண்டும்.

■ சில எடுத்துக்காட்டுகள் மூலம் பைபிள் இதை வலியுறுத்துகிறது —

☐ *விளைச்சல்* என்பது தேவனிடமிருந்து வருகிறது;
ஆனால் ஒருவன் **தண்ணீர் பாய்ச்ச** வேண்டுமே —
1 கொரி 3:6 ... *அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்*

☐ குழந்தை பிறப்பு என்பது தேவனது அற்புதம்;
ஆனால் குழந்தைக்குப் பாலூட்டவேண்டுமே —
1 பேது 2:1-3 ... *நீங்கள் வளரும்படி ... வசனப் பால் ...*

■ அப்போஸ்தலன் பவுலின் ஆன்மீகக் குமாரனாய்த் தீமோத்தேயு அவனால் நன்கு பயிற்றுவிக்கப்பட்டாலும், தீமோத்தேயுவின் தனிப்பட்ட பொறுப்பைப் பவுல் வலியுறுத்தினான் —

1 தீமோ 4:15 ... *நீ தேறுகிறது ...*

அரைகுறை மனதுடன், ஏனோதானோ என்றல்ல —
*''இவைகளில் நிலைகொண்டிரு''*

■ வளர்ச்சி தானாகவே ஏற்படுகிறது, நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றால், திருமறை திரும்பத் திரும்ப ***''வளருங்கள்''*** என்று சொல்லவேண்டியதில்லையே —

☐ 2 பேது 3:18 ... *கிருபையிலும் அறிவிலும் வளருங்கள்*

☐ 2 தீமோ 2:1 ... *கிருபையில் பலப்படு.*
அதாவது, கிருபையில் பலமாய் வளர்ந்திடு.

☐ எபே 6:10 ... *அவரது வல்லமையில் பலப்படுங்கள் ...*
அதாவது, கடவுள் வல்லமை அருளுகிறார்;
நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

■ **வயது** முதிர்ச்சியும் வளர்ச்சியைக் குறிக்காது —

எபி 5:12 ... அவர்கள் இவ்வளவு காலம் சத்தியத்தை அறிந்து,
தேவ வல்லமையை அனுபவித்திருந்தும்,
இன்னும் *''குழந்தைகள்''*தான்

■ ஒரு முக்கிய சத்தியம்:

''தானாகவே'' வளர்ச்சி ஏற்படுவதில்லை என்பதுபோல
**''உடனடியாகவும்''** வளர்ச்சி ஏற்படுவதில்லை —

☐ தாயின் வயிற்றிலேயே தூயாவியினால் நிரம்பியிருந்தாலும் யோவான் வளருவதற்குப் பல ஆண்டுகள் ஆயின —
லூக் 1:80

☐ 12 வயதிலேயே அவ்வளவாய் மறைநூல் தெரிந்திருந்தாலும் இயேசு வளருவதற்காய் பல ஆண்டுகள் எடுத்துக்கொண்டார் —
லூக் 2:52

☐ சீடர்கள் 3 ஆண்டுகள் இயேசுவிடம் வளர்ந்தனர்.

☐ *''சிறு வயதினனாயிருந்து''* தேவ *''மனிதன்''* என்று வளர தீமோத்தேயுவுக்குப் பல ஆண்டுகள் ஆயின —
2 தீமோ 3:15-17

■ திருத்தப்படவேண்டிய இன்னொரு காரியம்:
கடவுளருளும் வரங்களும் உடனடி வளர்ச்சியைத் தரா —

கொரிந்து விசுவாசிகளுக்கு அனைத்து வரங்களுமிருந்தன;
அவர்களோ இன்னும் *குழந்தைகளாகவே* இருந்தனர் —

1 கொரி 1:7/3:1,2

பழைய ஏற்பாட்டுக் கதாபாத்திரங்கள் பலரது ஊழியங்களில்
ஆவியானவரின் வல்லமையும் வரங்களும் இருந்தும்,
அவர்களிடம் ஆன்மீக வளர்ச்சியும், முதிர்ச்சியும்,
குணநலன் அபிவிருத்தியும் இல்லை.

வரங்களை நொடிப்பொழுதில் பெற்றுவிடலாம்;
கனி கொடுத்தலோ வளர்ச்சியோடு தொடர்புடையது.

வரங்கள் பெற்றுக்கொள்ளப்படுபவை;
கனிகள் விளைவிக்கப்படுபவை.

■ பெற்றோரிடமிருந்து திருப்பணியைப் பெற்றுக்கொள்வதும்
உடனடி வளர்ச்சியைத் தந்துவிடாது —

தலைமைத்துவத்தில் *தொடக்கநிலை சீடர்* அமர்த்தப்படுவதைப்
பவுல் எதிர்த்தான் — 1 தீமோ 3:6,7

ஆம், சீக்கிரம் பிரபலமாவது வளர்ச்சியைத் தடுக்கும் —
*''கண்ணி''*

சபை மேய்ப்பர்களும் பிரசங்கிமாரும் தங்கள் பிள்ளைகளைக்
காலத்திற்குமுன் தலைமைப் பொறுப்பிற்குக் கொண்டுவரக்கூடாது.
இந்த இளைஞர் தேவனோடு **நடைபோட்டு** வராவிட்டால்,
கடினமான வேளைகளில் ஒன்று முறிந்துவிடுவர்,
அல்லது உலக முறைகளைக் கையாளுவர்.

தனது மகன் சாலொமோனின் காரியத்தில்
தாவீது இதை நன்குணர்ந்திருந்தான் —

1 நாளா 29:1 *தேவன் தெரிந்துகொண்டவன் ...*
*இன்னும் வாலிபன், இளைஞன் ...*

■ விசுவாசிகளின் வளர்ச்சியில் தேவ ஊழியரும்
முக்கியப் பங்காற்றவேண்டும் —

(அ) அவர்களது வளர்ச்சிக்காய் ஜெபிப்பது

2 கொரி 13:9ஆ ... *''நீங்கள் நற்சீர் பொருந்த விண்ணப்பம்''*
1 தெச 3:9,10 ... *''இரவும் பகலும் ... உங்கள் விசுவாசத்திற்காய்''*

விசுவாசிகளின் வளர்ச்சிக்கான அப்போஸ்தல ஜெபங்கள் —
எபே 3:14-19
பிலி 1:9-11
கொலோ 1:9-13

(ஆ) அவர்களது வளர்ச்சிக்காய்ப் பாடுபடுவது
1 கொரி 3:6 ... *அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்*
எபே 4:11-13 ... *அப்போஸ்தலர் ... தீர்க்கர் ... பயிற்றுவிக்க*
கொலோ 4:12 ... *எப்பாப்பிரா ... போராடுகிறான்*
கொலோ 1:28,29 ... *உபதேசித்து ... போராடிப் பிரயாசம்*

பவுலும் குழுவினரும் விசுவாசிகளின் வளர்ச்சிக்காய்த்
தங்களையே வார்த்துவிட்டனர் —

1 தெச 2:7,8 ... *பால் கொடுக்கும் தாய் ... எங்கள் ஜீவனை*
பிலி 2:17 ... *பானபலியாக வார்க்கப்பட்டு ...*

- விசுவாசிகளின் வளர்ச்சியில் ஊழியக்காரரின் பொறுப்பைக் குறித்துப் பேசுகையில், பெற்றோர் செய்யவேண்டிய அடித்தளப் பணியை மறந்துவிடக்கூடாது —

  ஆதி 18:19 ... *ஆபிரகாம் ... பிள்ளைகள் ... வீட்டார்*
  எபே 6:4 ... *கர்த்தருக்கேற்ற சிட்சை ... போதனை*
  2 தீமோ 1:5 ... *விசுவாசம் ... பாட்டி ... தாய் ...*

- ஆம், ஆன்மீக வளர்ச்சி தானாக ஏற்பட்டுவிடுவதில்லை —

  விசுவாசிகள் தங்கள் வளர்ச்சிக்காய் முயற்சியெடுக்கவேண்டும்.
  விசுவாசிகளின் வளர்ச்சிக்காய் ஊழியர் உழைக்கவேண்டும்.
  பிள்ளைகளின் வளர்ச்சிக்காய்ப் பெற்றோர் பங்காற்றவேண்டும்.

## 2. அடித்தளத்திலேயே நின்றுவிடக்கூடாது.
Do not get stuck with the foundation.

- கட்டிடத்திற்கு அடித்தளம் அதிமுக்கியம்; ஆனாலும் மீண்டும் மீண்டும் அடித்தளத்தையே போட்டுக்கொண்டிருக்கக்கூடாது! மேற்கட்டிடத்தை எழுப்பவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்விலும் இப்படியே —

எபி 6:1,2 ... *மனந்திரும்புதல் ... விசுவாசம் ... ஸ்நானங்கள் ...*
*கைகளை வைக்குதல் ... உயிர்த்தெழுதல் ...*
*நித்திய நியாயத்தீர்ப்பு ...*

இந்த ஆறும் கிறிஸ்தவ உபதேசத்தின் அடித்தளங்கள்;
ஆனால் இவற்றையே பேசிக்கொண்டு நின்றுவிடக்கூடாது.

*''பூரணராகும்படிக் கடந்துபோகவேண்டும்''*
பூரணம் = முதிர்ச்சி, வளர்ச்சி

இல்லையேல் ''பின்வாங்கத்'' துவங்கிவிடுவோம் —
வச 4-6, *''ஏனெனில் ... விழுந்துபோனவர்கள் ...''*

- ''அடித்தளத்தையே'' ''கட்டிடம்'' என்று சொல்லுமளவிற்குக் கிறிஸ்தவம் சரிந்துவிட்டது —

எபி 6:1,2இன் ஆறினைப் ''பூரண'' சுவிசேஷம் என்கிறது;
ஆனால் அவை சுவிசேஷத்தின் ''அடித்தள'' சத்தியங்கள்தான்!

இப்படி இருப்பது ஏன்?

விசுவாசிகள் திரும்பத் திரும்பச் சுவிசேஷப் பிரசங்கங்களையே கேட்கிறார்கள்.
ஞாயிறு காலை ஆராதனைகள்கூட ''சுவிசேஷக்'' கூட்டங்களாய் மாறிவிட்டன —

விசுவாசிகளுக்கான ‘‘பக்திவிருத்தி’’ செய்திகள் அபூர்வம்.
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், பத்திரிகைகளிலும்
சுவிசேஷப் பிரசங்கங்கள்தான்

இயேசுவோ பைபிளில் பதிவு செய்யப்பட்ட முதல் பிரசங்கமாகிய மலைப்பிரசங்கத்திலேயே எத்தனையோ பொருட்கள்மீதுபேசினார் —
மத் 5, 6, 7

கோபம், விபச்சாரம், விவாகரத்து, விரோதிகளை நேசித்தல், தானதர்மம், ஜெபம், மன்னிப்பு, உபவாசம், பணம், முக்கியத்துவ வரிசை, கள்ளப் போதகர் & தீர்க்கர், இப்படிப் பல.

- சபைகளுக்கு அப்போஸ்தலர் எழுதிய கடிதங்களில் சுவிசேஷத்தின் ஆரம்ப ஆசீர்வாதங்களையே சொல்லிக்கொண்டிருக்கவில்லை:

— *ரோமர்:* கிறிஸ்து மூலம் வெற்றி வாழ்வு

— *1 & 2 கொரிந்தியர்:* பரிசுத்தமடையும் வாழ்வு

— *கலாத்தியர்:* கிருபையிலிருந்து விழாதபடி எச்சரிப்பு

— *எபேசியர்:* கிறிஸ்துவோடு அமர்ந்திருப்பதின் ஆசீர்வாதங்கள்

— *பிலிப்பியர்:* எல்லாச் சூழலிலும் மகிழ்ச்சி

— *கொலோசெயர்:* கிறிஸ்துவின் முதன்மைத்துவம்

— *1 & 2 தெசலோனிக்கேயர்:* கிறிஸ்துவின் வருகை

— *1 & 2 தீமோத்தேயு:* தேவனது வீட்டில் நடக்கை

— *தீத்து:* ஆரோக்கிய உபதேசத்தில் நிலைத்திருப்பு

— *எபிரெயர்:* மேலான உடன்படிக்கை

— *யாக்கோபு:* செயலற்ற விசுவாசம் செத்தது.

— *1 & 2 பேதுரு:* கள்ளப் போதகருக்கு எச்சரிக்கை

— *1, 2 & 3 யோவான்:* ஆதி முதலிருக்கும் அன்பின் செய்தி

— *யூதா:* விசுவாசத்திற்காய்த் தைரிய போராட்டம்

— *வெளிப்படுத்துதல்:* நித்திய நம்பிக்கை

நமது சபைகளில் திரும்பத் திரும்பப் பிரசங்கிப்படுகிறவைகளை இந்நிருபங்களில் விளக்கியுள்ள கருத்துக்களோடு ஒப்பிட முடியுமா?

■ மக்களது தரத்திற்கு இறங்குவதற்குப் பதிலாக,
மக்களைத் தங்களது தரத்திற்கு உயர்த்த பிரசங்கிமார் முயலவேண்டும்!

☐ யோவான் கடினமானவற்றைப் பிரசங்கிக்கவில்லையா?
(யோ 1, லூக் 3)

☐ இயேசுவானவர் கடினமானவற்றை உபதேசிக்கவில்லையா?
(யோ 6:60)

☐ பவுல் கடினமானவற்றை எழுதவில்லையா? (2 பேது 3:15,16)

■ அநேக சபைகளில் வாரந்தோறும் மக்களுக்குக் கிடைக்கும் ஆன்மீக ஆகாரம் ஒரு 20-நிமிடப் பிரசங்கமே — எவ்வளவு துக்கம்!
எப்படி அவர்களால் வளர முடியும்?

ஆதி அப்போஸ்தலர் போதுமானதற்கும் ''அதிகமாக'' மக்களுக்குப் பிரசங்கித்தார்கள் —

☐ திருமுழுக்கினன் யோவான் (லூக் 3:18)
☐ அப்போஸ்தலன் பேதுரு (அப் 2:40)
☐ யூதாவும் சீலாவும் (அப் 15:32)
☐ பவுலின் முழுப்பகல் பிரசங்கம் (அப் 28:23)

■ பார்வோனுக்குத் தேவ அழைப்பு: *''என் மக்களைப்* ***போகவிடு!''***
பாஸ்டர்களுக்குத் தேவ அழைப்பு: *''என் மக்களை* ***வளரவிடுங்கள்!''***

நீங்கள் இருக்குமிடத்தில் வளர முடியாவிடில்,
வளரக்கூடிய இடத்திற்குப் போய்விடுங்கள்!
ஒருவரும் உங்களைத் தடுத்து நிறுத்த முடியாது!
யோ 10:9 ... *நானே வாசல் ... உள்ளும் புறம்பும் மேய்ச்சல் ...*

பாஸ்டர் பேதுருவை மட்டுமே கேட்கவேண்டுமென யார் சொன்னது?
அப்போஸ்தலன் பவுல் பிரசங்கிப்பதையும் கேட்கவேண்டும்!
இல்லையேல், புதிய ஏற்பாடு எங்கே?
அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் மூச்சுத் திணற வைக்கும்!

■ உங்கள் பாஸ்டர் தேக்கரண்டியிலேயே உங்களுக்கு ஊட்டிக்கொண்டி ருந்தால், நீங்கள் பால் குடிக்கும் பருவத்தை விட்டு வரமாட்டீர்கள்.

தேக்கரண்டியில் ஊட்டுதலென்றால் என்ன?

— உங்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக
அவரே உங்களுக்காய் ஜெபிப்பார்.
— திருமறையை வியாக்கியானிக்கக் கற்றுக்கொடுக்காமல்
அவரே உங்களுக்குப் பிரசங்கித்துக்கொண்டிருப்பார்.

இவ்வித அமைப்பில்,
முதல் வகுப்பிலிருந்து இரண்டாம் வகுப்பிற்குத் தேறமாட்டீர்கள்;
ஆனால் திரும்ப LKGக்கும் UKGக்கும் கொண்டுவரப்படுவீர்கள்.

முன்செல்லாமல்,
வட்டத்திலேயே சுற்றிவந்துகொண்டிருப்பீர்கள்!

இதைத்தான் ''ஆடும் நாற்காலிக் கிறிஸ்தவம்'' என்கிறோம் —
அசைவு இருக்கும், முன்னே செல்லாது.

■ அதே வேளையில், எல்லாப் பழியையும் சபை மேய்ப்பர் மீதும் பிரசங்கிமார் மீதும் போட்டுவிட முடியாது.

விசுவாசிகளில் அநேகர் புது சவால்களை எதிர்கொள்ள
விரும்புவதில்லை —

☐ கானானுக்குச் சென்ற 12 உளவாளிகளில் 10 பேர்
(எண் 13:26-14:10)

☐ காத், ரூபன் கோத்திரத்தார் —
சொகுசான பகுதிகளை விட்டுச்செல்ல விரும்பாது
*யோர்தானின் இக்கரையிலேயே* இருக்க விரும்புவது (32:1-5)

எகிப்தை விட்டு வெளிவந்ததில் பரம திருப்தி;
கானானுக்குள் நுழைய துணிச்சலும் துடிப்பும் இல்லை.

■ இன்னும் சிலர் இப்படிச் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள் —
''**வேர்களே** முக்கியம்!''

ஆம், வேர்கள் முக்கியம்தான்;
ஆனால் கனி கொடுக்க வளரவேண்டுமே —
ஏசா 37:31 ... *கீழே வேர் ... மேலே கனி ...*

வேர்கள் கனிகளோடு இணைந்தவை —

எபே 3:17 ... *வேரூன்றி நிலைபெற்றவர்களாகி ...*

எபே 3:18,19 ... எல்லாப் பக்கமும் கிளைவிட்டு *பூரணம்* அடைதல்
கொலோ 2:6 ... *கிறிஸ்துவுக்குள் வேர், ...*

**அத்துடன்,** *அவர்மேல் கட்டிடம்*

விதையானது விதையாகவே இருந்துவிடக்கூடாது;
அதை அப்படியே வைத்திருக்கக்கூடாது,
அதை விதைக்கவேண்டும் —

மத் 13:31,32 ... *கடுகு விதை ... விதைத்தான் ... மரம் ...*

## 3. சரிவிகிதமின்றி வளரக்கூடாது. (பகுதி 1)

Do not grow disproportionately. (Part 1)

■ வளர்ச்சியைக் குறித்த நேர்த்தியானதொரு பகுதி —

எபே 4:15 ... ***எல்லாவற்றிலும்*** *வளருகிறவர்களாய் ...*

நாம் ''எல்லாப்'' பகுதிகளிலும் வளரவேண்டும்.
ஆன்மீக வளர்ச்சியில் அநேகப் பகுதிகள் உண்டு.
இதுதான் ''பல பரிமாண'' அல்லது ''பல கோண'' வளர்ச்சி என்பது.
படிப்பினை: எந்தப் பகுதியையும் ஒதுக்கக்கூடாது.

ஒன்றையும் ஒதுக்கிவிடாமல் எல்லா அம்சங்களிலும் வளர வேண்டுமென விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர் சவாலிட்டனர் —

2 கொரி 8:7 ... *''எல்லாவற்றிலும்'' பெருகியிருப்பதுபோல ''இந்தக் கிருபையிலும்'' பெருகுங்கள்.*
(அதாவது, எளியவரோடு பகிர்ந்துகொள்வதில்)

''எல்லாப்'' பகுதிகளிலும் நாம் கவனம் செலுத்தும்போது நமக்குக் கிடைக்கும் ''தேவ'' வாக்கு —

2 கொரி 9:8 ... ***எல்லாக்*** *கிருபை ...* ***எல்லாப்*** *பூரணம் ...* ***எல்லாக்*** *காரியங்கள் ...* ***ஒவ்வொரு*** *நற்செயல்* ***எப்பொழுதும்*** *...*

என்னே வாக்குறுதி! அல்லேலூயா!

■ இந்தப் பல பரிமாண வளர்ச்சி வேதாகமக் கதாபாத்திரங்கள் பலர் மூலம் தெளிவுறுத்தப்படுகிறது —

- ☐ சின்ன சாமுவேல் (1 சாமு 2:26)
  *... தேவனுக்கும் மனிதருக்கும் பிரியமாய் ...*
- ☐ இளைஞன் இயேசு (லூக் 2:52)
  *''வளர்த்தியில்''* — உடல் வளர்ச்சி
  *''ஞானத்தில்''* — அறிவு வளர்ச்சி

*''தேவ கிருபையில்''* — ஆன்மீக வளர்ச்சி
*''மனிதர் தயவில்''* — சமூகநீதியில் வளர்ச்சி

■ எத்தனையோ வகையான வளர்ச்சியை வேதம் சுட்டிக்காட்டுகிறது —

☐ *''கிருபையின் மேல் கிருபை''*

யோ 1:16 ... *கிருபையின் மேல் கிருபை ...*
2 தீமோ 2:1 ... *கிருபையில் பலப்படு*
2 பேது 3:18 ... *கிருபையிலும் அறிவிலும் வளருங்கள்*

☐ *விசுவாசத்திலிருந்து விசுவாசம்*

ரோ 1:17
ரோ 4:21 ... *ஆபிரகாம் விசுவாசத்தில் பலப்பட்டான்*
2 கொரி 10:16 ... *விசுவாசம் விருத்தியாகும்போது ...*
லூக் 17:5 ... *''விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும்''*

☐ *நீதியின் மேல் நீதி*

வெளி 22:11
யோ 17:19 ... *என்னையே பரிசுத்தமாக்குகிறேன்*

☐ பறைசாற்றல், இன்னும் பறைசாற்றல் (ஊழியம்)

யோ 17:26 ... *அறிவித்தேன் ... இன்னமும் அறிவிப்பேன்*
எத்தனையோ பிராந்தியங்களில் கிறிஸ்துவின் நாமத்தை
அறிவித்த பின்னரும், பவுலுக்கிருந்த வாஞ்சை —
ரோ 1:15 ... *ரோமாபுரியிலுள்ள உங்களுக்கும்* (15:23)

☐ வெற்றி மேல் வெற்றி

ரோ 8:37 ... *முற்றும் ஜெயங்கொள்வோர் ...*

— நல்லதுக்கும் தீயதுக்கும் இடையிலல்ல,
நல்லதுக்கும் நேர்த்தியானதுக்கும் இடையிலான யுத்தம்
(வச 33-39)

*''மரணம்''* மட்டுமல்ல, *''ஜீவன்''* என்றாலும் ...
தீய *''சக்திகள்''* மட்டுமல்ல, *''தூதர்கள்''* என்றாலும்...

■ ஆன்மீகப் பயிற்சிகள் சிலவற்றைக் கவனித்து
அவற்றில் வளர்வதென்றால் என்னவென்று பார்ப்போம் —

☐ பைபிளைப் புரிந்துகொள்வதில் வளர்ச்சி

பைபிள்: பிரமாணம், சரித்திரம், தீர்க்கதரிசனம்,
ஞானம், உபதேசம் ...

இவைகளில் இருப்பவை —
வாக்குகள், கற்பனைகள், எச்சரிப்புகள், அறிவுரைகள், முதலியன
கடவுளது ''வாக்குகளை'' மட்டும் எடுத்தெழுதியுள்ள
புத்தகங்களைத் தேடியலைவது குழந்தைத்தனம்!

''முழு'' வேதமின்றி ''முழு'' வளர்ச்சி கிட்டாது.

2 தீமோ 3:16,17 ... *வேதவாக்கியங்கள் எல்லாம் பயனுள்ளவை*

☐ ஜெப வாழ்வில் வளர்ச்சி

ஆண்டவரிடம் தேவைகளைக் கேட்பது மட்டுமல்ல;
அவரது சித்தத்தின்படியே கேட்பது —

1 யோ 5:14 ... *அவரது சித்தத்தின்படி ...*
3:22 ... *வேண்டுவது ... அவருக்குப் பிரியமானவை*
*... கைக்கொண்டு ...*

☐ தொழுகையில் வளர்ச்சி

பரவசத்திற்காய் ஆராதிப்பது; தேவன் **செய்தவற்றிற்காய்** மட்டும்
நன்றி சொல்லுவது: குழந்தைத்தனம்
ஆனால், அவர் **யார்** என்பதற்காய்த் துதிப்பது —

அதாவது, அவர் பாத்திரர் ... வெளி 4:11 ... *பாத்திரர்*
5:9 ... *பாத்திரர்*
5:12 ... *பாத்திரர்*
5:13 ... *துதி, கனம்*
7:12 ... *துதி, கனம்*

☐ பரிசுத்தத்தில் வளர்ச்சி

துவக்கத்தில் ... செய்யத் தகாதவை எனும் பாவங்கள் மட்டும்
வளர வளர ... செய்யத் தவறியவை எனும் பாவங்களும்

முதலாவது, பிறரோடு ஒப்பிடுதல் (பரிசேயன்/வரிக்காரன்) (லூக் 18)
வளர வளர, தேவனது பரிசுத்தத்தோடு ஒப்பிடுதல் (ஏசா 6)

முதலாவது, *''மாம்சத்தின்''* கிரியைகளை விடுதல் (கலா 5:19-21);
அத்துடன், *''ஆவியிலுள்ள''* அசுசியையும் அகற்றல் (2 கொரி 7:1)
பின்னர், *ஆவியின் கனிகளில்* வளருதல் (கலா 5:22,23)

☐ கீழ்ப்படிதலில் வளர்ச்சி

''இயேசுவானவர் *கீழ்ப்படிதலைக் ''கற்றுக்கொண்டார்!''* (எபி 5:8)
கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறத் தண்ணீரில் இறங்கினார் ...
கீழ்ப்படிந்து பாடுகளின் நெருப்புக்குள் நடந்தார் ...
எப்பொழுதுமே கீழ்ப்படிந்து நடந்தார்;
கீழ்ப்படியாமையின் சோதனைகளுக்கு இடங்கொடுக்கவில்லை.

நம்மைப் பொறுத்தவரை —
இயல்பாகவே *''கீழ்ப்படியாமையின்'' பிள்ளைகள்* (எபே 2:1-3)
பின்னர், தயங்கித் தயங்கிக் கீழ்ப்படிதல்
பின்னர், விருப்பமானவற்றிற்கு மட்டும் கீழ்ப்படிதல்
பின்னர், தாமதமாய்க் கீழ்ப்படிதல்

இந்நிலையிலிருந்து நாம் முழு மனதுடன், அகமகிழ்வுடன்,
உடனடிக் கீழ்ப்படிதலுக்கு வளரவேண்டும்.

☐ மன்னிப்பதில் வளர்ச்சி
முதலில் — 7 முறை
பின்னர் — 70 X 7 முறை (மத் 18:21,22)

☐ பொறுமையில் வளர்ச்சி
குழந்தைகள்தான் எதற்கும் பொறுக்கமாட்டார்கள்;
எல்லாம் உடனே!

(உ-ம்) ஜெபத்தில் —
ஆரம்ப நிலை ... உடனடிப் பதில்கள்
வளர் நிலை ... தாமதமான பதில்கள்
மேம்பட்ட நிலை ... வித்தியாசமான பதில்கள்

☐ தாழ்மையில் வளர்ச்சி

(உ-ம்) மோசே: அவனது வாழ்வில் 3 நிலைகள் —

முதலாவது, தன்னைப் பெரியவனாகக் கருதினான்
பின்னர், தான் ஒன்றுமில்லை எனக் கண்டான்
முடிவில், கடவுள்தான் எல்லாம் எனப் புரிந்துகொண்டான்

(உ-ம்) பவுல்

பாவியாக: *"பாவிகளில் பிரதான பாவி"* (1 தீமோ 1:15)
பரிசுத்தவானாக: *"பரிசுத்தவான்களில் சிறியவன்"* (எபே 3:8)
அப்போஸ்தலனாக: *"அப்போஸ்தலர் அனைவரிலும் சிறியவன்"* (1 கொரி 15:9)

■ பல பரிமாண வளர்ச்சியை இவ்விதம் சுருக்கிக் கூறலாம் —

அது பரிசுத்தத்தில் *உயரத்திற்கு* ஏறுதல்.
அது வேதத்தை *ஆழமாய்த்* தோண்டுதல்.
அது ஜெபத்தில் தேவனிடம் *கிட்டிச்* சேருதல்.
அது பண்பில் *மென்மையாய்* நடத்தல்.
அது மக்களைக் கரம் *விரித்து* ஏற்குதல்.
அது பணியிலும் ஊழியத்திலும் *கடினமாய்* உழைத்தல்.

■ பல பரிமாண வளர்ச்சி குறித்து இன்னும் கூடுதலாய் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## 4. சரிவிகிதமின்றி வளரக்கூடாது. (பகுதி 2)
Do not grow disproportionately. (Part 2)

- மறுபிறப்பைத் தொடர்ந்த ஆன்மீக வளர்ச்சியானது
  பிறப்பைத் தொடர்ந்த வளர்ச்சிக்கு ஒப்பானது.
  இவ்வித ஒப்புமை திருமறையில் அடிக்கடி இடம்பெறுகிறது.

  ஒரு குழந்தையை ஒரு சிறிய ''முழு மனிதன்'' எனலாம் —
  அதற்கு 2ஆம் ஆண்டு ஒரு கையும் 3ஆம் ஆண்டு ஒரு காலும்
  இணைப்பதில்லை! பிறப்பிலேயே எல்லா உறுப்புகளும் அதற்கு உண்டு;
  முதல் நாள் முதல் அது எல்லா உறுப்புகளிலும் வளரவேண்டும்.

  மறுபடி பிறக்கும் ஆன்மீகக் குழந்தைக்கும் அப்படியே.
  அதாவது, துவக்க முதலே,
  தேவப் பிள்ளைகள் எல்லாவற்றிலும் சரிவிகிதமாய் வளரவேண்டும்.

  நாம் எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்பது —

  நற்செய்திப்பணியானால், கால்கள்தான் வளருகின்றன!
  தானதர்மமானால், கைகள்தான் வளருகின்றன!
  பரிசுத்தப்படுதலானால், இரு சிறுநீரகங்கள் போதாதா?
  தொழுகையானால், முடவனுக்கும் நல்ல ''இருதயம்'' இருக்கலாமே!

- முந்திய அத்தியாயத்தில் பல பரிமாண வளர்ச்சிக்கு
  இரு தனி நபர்களைக் கவனித்தோம்: சின்ன சாமுவேல்
  இளைஞன் இயேசு

  இப்பொழுது இரு சபைகளைப் பார்ப்போம் —
  - ☐ எஸ்றா, நெகேமியா தலைமையில் கூடிய யூதர்
    நெகே 9:3 ... தியானம் (Word) + தொழுகை (Worship)
  - ☐ பெந்தெகொஸ்தேயை அடுத்து ஆதிச்சபை
    அப் 2:42 ... *உபதேசம் ... ஐக்கியம் ... அப்பம் பிட்குதல் ... ஜெபம்பண்ணுதல்*

இன்றைய பெரும்பாலான சபைகள் இச்சமநிலையை இழந்துவிட்டன—

- ☐ **தொழுகையை** (Worship) மட்டுமே வலியுறுத்தும் சபை
  போதுமான போதனையில்லாததால்
  ஆழமற்ற விசுவாசிகளையே உருவாக்கும்.
- ☐ **திருவசன ஆராய்ச்சியையே** (Wordstudy) வலியுறுத்தும் சபை
  மகிழ்ச்சி நிறை தொழுகையில்லாததால்
  வறட்டு விசுவாசிகளையே உருவாக்கும்.
- ☐ **சாட்சி பகர்தலை** (Witnessing) மட்டுமே வலியுறுத்தும் சபை
  உபதேச முதிர்ச்சியும் நடைமுறைப் பரிசுத்தமுமில்லாததால்
  குன்றிய விசுவாசிகளையே உருவாக்கும்.

■ நமது ''முழு'' வளர்ச்சிக்காய்ச் சபையில் தேவன் போதுமான
ஏதுக்களை வைத்திருக்கிறார் —

எபே 4:11-15 ... *பூரண மனிதன் ... கிறிஸ்துவின் நிறை வளர்ச்சி*

வேறு வார்த்தைகளில் சொன்னால்,
ஐவகை ஊழிய வரங்களும் நமக்குத் தேவை —

*அப்போஸ்தலர் ... தீர்க்கர் ... சுவிசேஷகர் ... மேய்ப்பர் ... போதகர்*

எப்பொழுதும் ஒரு பாஸ்டரையே கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

— அப்போஸ்தலர் உங்களில் மிஷனரித் தரிசனம் ஊன்றுவர்.
— தீர்க்கர் உங்களுக்குத் தேவ காரியங்களில் கூரிய பார்வை தருவர்.
— சுவிசேஷகர் உங்களுக்குள் மனதுருக்க ஆவியைப் புகுத்துவர்.
— போதகர் உங்களுக்கு வசனத்தில் நடைமுறை அறிவு புகட்டுவர்.

ஒரு மேய்ப்பரை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தால்,
நீங்கள் ''கிறிஸ்தவனாக'' (Christian) அல்ல,
''சபைப் பித்தனாகவே'' (Churchian) வளருவீர்கள்!

■ நமது ஆன்மீக வளர்ச்சிக்கும் பலப்படுதலுக்காகவும் தேவன்
எத்தனையோ பயிற்சிகளைக் குறிப்பிட்டுள்ளார் —

(உ-ம்) ஆன்மீகப் படைக்கலன்கள் (எபே 6:10-18)

எது அழுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது பாருங்கள்:

*''சர்வ''* (எல்லா) *ஆயுதம்* (வச 11)

*''சர்வ''* (எல்லா) *ஆயுதம்* (வச 13)

இங்கு 7 ஆயுதங்கள் பெயரிடப்பட்டுள்ளன —

*சத்தியம் எனும் கச்சை, நீதி எனும் மார்க்கவசம்,*
*ஆயத்தம் எனும் மிதியடி, விசுவாசம் எனும் கேடயம்,*
*இரட்சிப்பு எனும் தலைச்சீரா, வசனம் எனும் பட்டயம்,*
*ஆவியில் ஜெபம்*

ஒன்றை விட்டாலும் பலங்குன்றிவிடுவீர்.
ஒன்றுக்காக ஒன்றை விட்டுவிடக்கூடாது.

☐ சிலர் எப்பொழுதும் நற்செய்தியை அறிவிக்கக் ''கால்களால்'' விரைந்துகொண்டிருப்பர்;
ஆனால் ஆவியில் ஜெபிக்க ''முழங்காலில்'' இருக்கமாட்டார்.

☐ இன்னும் சிலர் தங்கள் ''தலைகளை'' இரட்சிப்பின் தலைச்சீராவால் காத்துக்கொள்வர் —
அதாவது, இரட்சிப்பின் நிச்சய ஆசீர்வாதங்களில் திளைத்திருப்பர்;
ஆனால் தங்கள் ''மார்புகளை'' நீதியின் கவசத்தால் காக்கமாட்டார்—

அதாவது, நடைமுறையில் நீதியாய் நடந்திடவேண்டிய பொறுப்பை உணரமாட்டார்.

■ கிறிஸ்தவ வாழ்வுக்கு இரு பகுதிகள் உண்டு —

(அ) கிறிஸ்தவ நடக்கை (walk)

(ஆ) கிறிஸ்தவ செய்கை (work)

இரண்டிலும் பலமாய் வளர அழைக்கப்படுகிறோம் —

1 தெச 4:1,2 ... *அதிகமதிகமாய்* ... நடக்கவும்

1 கொரி 15:58 ... *செய்கைகளில் பெருகுகிறவர்களாகவும்*

இப்படித்தான் தீமோத்தேயுவைப் பவுல் வளர்த்தான் —

1 தீமோ 4:12 ... *இளமை* ... *கற்பு* ...

:13,14 ... *வாசிக்கிறதிலும் உபதேசிக்கிறதிலும்* ...

:15 ... (இரண்டுமே) *தேறுகிறதற்காக* ...

தகுந்த ''நடக்கை'' இல்லாத ''செய்கை'' கவர்ச்சியற்றது;
தகுந்த ''செய்கை'' இல்லாத ''நடக்கை'' கனியற்றது.

■ உடலின் வளர்ச்சி, ஆரோக்கியம் பற்றிப் பேசுகையில்,
கீழ்க்கண்டவை போன்ற குறைபாடுகளைக் குறிப்பிடுகிறோம் —

வைட்டமின் குறைவு,
கால்சியம் குறைவு,
இரும்புச் சத்து குறைவு, முதலியன.

இவைகளைச் சரிசெய்யக் கூடுதல் ஊட்டச்சத்து எடுக்கவேண்டும்.

அதே போல, ஆன்மீக வளர்ச்சிக்கும்,
எங்கே நாம் பலங்குன்றியிருக்கிறோமென்று பார்த்து
தகுந்த பரிகாரம் செய்யவேண்டும் —

(உ-ம்) இன்னும் கூடுதல் வேதத் தியானம்
இன்னும் கூடுதல் ஜெப வேளை
இன்னும் கூடுதல் சாட்சி பகர்தல்

இதைத்தான் சர்தை சபைக்கு இயேசு சொன்னார் —
வெளி 3:2 ... *சாக இருப்பவைகளைத் திடப்படுத்து!*

ஒரு சங்கிலியின் பலத்தை நிர்ணயிப்பது அதின் பலக்குறைவான கண்ணிதான்!
உங்கள் வளர்ச்சி முழுமையாகவும் சரிவிகிதமாகவும்
இருக்கும்படி பலக்குறைவான பகுதிகளைப் பலப்படுத்துங்கள்.

## 5. கடினமான பகுதிகளைத் தவிர்த்துவிடக்கூடாது.

Do not avoid difficult areas.

- எதையும் செய்வதற்குச் சுலபமான வழியைக் கண்டுபிடிப்பதே மனிதனின் அடிப்படைக் குணம்.

உலகின் போக்கும் மனிதனுக்கு எல்லாவற்றையும்
சுலபமும் வசதியும் ஆக்குவதே.

ஆன்மீக வளர்ச்சிக்கோ இது பொருந்தாது.
ஆன்மீக வளர்ச்சியென்பது மலையேறுவது போன்றது;
அது மின்தூக்கியில் செல்வதல்ல;
படிக்கட்டில் ஏறுவதையும்,
வாகனத்தில் மலைமீது ஏறுவதையும்விடக் கடினமானது.

ஒருவர் இப்படிச் சொன்னார்:
''கிறிஸ்தவ வளர்ச்சி பரவசமானது மட்டுமல்ல,
பிழிந்தெடுப்பதுமாகும்!'' (exciting & exacting)

- நாம் *''எல்லாவற்றிலும்'' வளரவேண்டும்* என்று பார்த்தோம் —

அதாவது, எல்லாப் பகுதிகளிலும், கோணங்களிலும்,
பரிமாணங்களிலும்.
ஒரு சில பகுதிகளில் வளருவது
மற்றவற்றில் வளருவதைவிடக் கடினமானதே.
கடினமான பகுதிகளைத் தவிர்ப்போமானால்,
நமது வளர்ச்சி முழுமையாக இருக்காது.

- சில எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம் —

### (அ) ஜெபம்

நமது தேவைகளைக் கடவுளுக்குமுன் சமர்ப்பிப்பதில்
நமக்குப் பிரச்னையில்லை;
ஜெபமோ இன்னும் பல காரியங்களையும் உள்ளடக்கியது —
1 தீமோ 2:1 ... *விண்ணப்பங்கள் ... ஜெபங்கள் ... மன்றாட்டுகள் .... ஸ்தோத்திரங்கள் ...*

இதில் கடினமான பகுதி *''மன்றாட்டுகள்''* (வேண்டுதல்கள்)தான். மன்றாடுதல் என்றால், பிறரது பிரச்னைகளோடு நம்மை அடையாளப்படுத்திக்கொண்டு, தேவைப்பட்டால் உபவாசத்துடன், தேவனுக்குமுன் காத்துக்கிடப்பது.

(உ-ம்) தானியேல்: தானி 7:28 ... முழு ஆள்தத்துவமும் பாதிப்பு
10:2,3 ... இன்பங்கள் ஒதுக்கப்பட்டன

ஜெபத்தோடும் உபவாசத்தோடும் ஆண்டவருக்குமுன்
காத்திருக்கும் **''காலங்கள்''** நமது வளர்ச்சியை மேம்படுத்தும்.
எனவே, ஜெப வேளைகளில் ''மன்றாட்டை'' ஒதுக்கிவிடாதீர்.

**(ஆ) திருமறைத் தியானம்**

காலையில் ஒரு சங்கீதம் அல்லது ஓர் அத்தியாயத்தை ''வாசிப்பதோடு'' அநேக விசுவாசிகள் நிறுத்திவிடுகின்றனர்.

இது நம்மை இறங்கிவிடாது பார்த்துக்கொள்ளும், அவ்வளவுதான்!
ஏதோ, உயிரோடிருப்போம், அவ்வளவுதான்!

நாம் கூடுதலாய்ச் செய்யவேண்டியது —
மணிக்கணக்காய்த் ''தியானம்.''
ஆராய்ச்சி நூல்களுடன் அவசரப்படாது வேதப் ''படிப்பு.''
திருவசனங்களை ''மனனம்'' செய்தல்.

இதைத்தான் எபி 5:13,14இல் ஆக்கியோன் குறிப்பிடுகிறான் ...
பைபிளில் *''பாலுணவும்''* உண்டு, *''புலாலுணவும்''* உண்டு!
''பால்'' vs. ''புலால்'' — கடினப் பகுதிகளை ஒதுக்காதீர்;
milk vs. meat ஆராய்ச்சி நூல்களுடன் படியுங்கள்.

**(இ) தன்னடக்கம்**

கிறிஸ்தவச் சீடனின் அடிப்படைக் குணநலனாக
இது போதிக்கப்பட்டிருக்கிறது —
*''ஆவியின் கனி ... தன்னடக்கம்''* (கலா 5:23)

தன்னடக்கத்தில் மிகவும் கடினமான பகுதி ''நாவடக்கம்'' —
யாக் 3:7,8

அதாவது, நாவைப் *''பழக்கிவிட''* முடியாது;

அதை விழிப்புடன் *''கட்டுப்படுத்த''* வேண்டும்!

அது இல்லாது முதிர்ச்சி (வளர்ச்சி) இல்லை —

வச 2 ... *பூரண* (முதிர்ச்சியடைந்த) *மனிதன்* ...

நாவைக் கட்டுப்படுத்துவது எங்ஙனம்?

ஒரு தீர்மானம் (சங் 39:1அ)

ஒரு ஜெபம் (சங் 19:14)

ஒரு பிரயாசம் (1 பேது 3:10)

**(ஈ) இரண்டாம் மைல் மார்க்கம்**

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவராகிய இயேசு

*''பூரண சற்குணத்தைப்''* பற்றிப் பேசினார் (மத் 5:48)

இந்தப் பூரணத்தை அடைய,

அவர் சில நடைமுறை அறிவுரைகள் தந்தார்:

... *வலது கன்னம் ... இடது கன்னம்* (வச 39)

... *கீழங்கி ... மேலங்கி* (வச 40)

... *ஒரு மைல் ... இரண்டாம் மைல்* (வச 41)

(பாதசாரிகளை ரோமச் சேவகர் படுத்தும் பலவந்தம்)

... *சிநேகிதர் ... சத்துருக்கள்* (வச 44)

இவையெல்லாம் கடினமானவை என்பதில் சந்தேகமில்லை;
ஆனால் ஆன்மீக வளர்ச்சிக்குக் குறுக்குவழி இல்லையே!

**(உ) தனிப்பட்ட திருத்தங்களை ஏற்குதல்**

கடிந்துரைகளும் திருத்தங்களும் நிறைந்துள்ள
**பிரசங்கங்களைக்** கேட்பதில் நமக்குப் பிரச்னையில்லை;
யாராவது **தனிப்பட்டு** நம்மைத் திருத்திவிட்டாலோ
தற்பெருமை பொங்கிவருவதைப் பார்க்கவேண்டுமே!

திருத்தங்களை ஏற்றுக்கொண்ட நல்ல எடுத்துக்காட்டுகள்:

— யோபு (யோபு 6:24) ... *எதில் தவறினேன் ... உபதேசியுங்கள்*

— தாவீது (சங் 141:5அ) ... *குட்டட்டும் ... தலைக்கு எண்ணெய்*

குறிப்பாக, திருத்தங்கள் இளைஞரிடமிருந்து வரும்போது —
பிர 4:13 ... *மூடனாகிய ராஜா ... ஞானியாகிய இளைஞன்*

**(ஊ) தாராளமாய்க் கொடுத்தல்**

கடவுளுக்கோ எளியவருக்கோ ''பிரமாணப்படி'' கொடுப்பது கடினமல்ல;
ஆனால் அப்போஸ்தலர் விடும் சவாலைப் பாருங்கள் —

2 கொரி 8:7,9 ... *விசுவாசம், போதிப்பு, அறிவு* போன்றவை
நாம் பாதிக்கப்படுமளவிற்குக் கொடுப்பது
போன்று கடினமானவை அல்ல!
*நம்மைத் தனவான்களாக்க இயேசு தரித்திரரானார்!*

இங்குதான் அந்தப் பணக்கார வாலிபன் மாட்டிக்கொண்டான் —
மத் 19:16-22 ... *நீ பூரண சற்குணனாயிருக்க (இன்னும் வளர)*
*விரும்பினால் ... விற்று ... கொடுத்துவிடு ...*

''போதுமெனும் மனதில்'' வளர்வது முதிர்ச்சியின் அடையாளம் —
1 தீமோ 6:6 ... *போதும் ... ஆதாயம்* (= கூடுதல்)
:11 ... *நீதி ... பொறுமை ... ''நாடு''* (= வளரு)

அநேக விசுவாசிகளின் வளர்ச்சியைத் தடுப்பது இதுவே —
மத் 13:22 ... *முட்கள் ... செல்வத்தின் மயக்கம்*
நீதி 11:28 ... *செல்வன் ... விழுவான் ... நீதிமான் ... தழைப்பான்*

**(எ) கடினமான வேலைகள்**

உலக ரீதியான வேலையானாலும், ஆன்மீகப் பணியானாலும், மற்றவற்றைவிடக் கடினமான வேலைகள் இருக்கத்தான் செய்கின்றன. கடினமான வேலைகளைச் செய்ய நாம் ஆயத்தமாயிராவிடில், நமது வளர்ச்சி ஆங்காங்கே நின்றுவிடும்.

(உ-ம்) காலேப்: யோசு 14:10-12 ... *எனக்கு மலைநாடு ... 85 வயது*
பிறந்த நாள் பரிசு: பஞ்சான கேக் அல்ல,
பாறையான மேட்டுப்பகுதி!

(உ-ம்) வில்லியம் கேரி:

"தேவனிடமிருந்து பெரிய காரியங்களை **எதிர்பாருங்கள்!"**

இதை எல்லாரும் செய்வர்; அடுத்த வரி? —

"தேவனுக்காய்ப் பெரிய காரியங்களை **முயற்சியுங்கள்!"**

(Expect ... Attempt)

சவாலின்றி வளர்ச்சியேது?

சவால்கள்தான் நம்மை இழுத்து விரிவடையச் செய்பவை!

முடியாது எனப்படுபவைகளை நாம் முயற்சிக்கும்போதுதான்,

நமது ஆன்மீகத் தசைகள் முறுக்கேறும்.

கடின உழைப்பிற்குத் *"தேவ கிருபை"* பதிலாகாது —

1 கொரி 15:10 ... *எல்லாரிலும் அதிகப் "பிரயாசம்" ... கிருபை*

ஏனோதானோ என்றிருக்க இடமில்லை.

தளராமைக்கும் இணையின்மைக்கும் அர்ப்பணிப்போம்.

வளர்ச்சிக்குச் சோம்பல் பரம எதிரி.

துணிந்து முன்வருவோரே உயரமாய் வளருவர்.

(உ-ம்) பிரிஸ்கில்லாவும் ஆக்கில்லாவும்

*"கழுத்தைக்" கொடுத்தார்கள்* — ரோ 16:3,4

## 6. இன்னல்களைத் தடங்கல்களாய்க் கருதக்கூடாது.
Do not consider adversity an obstacle.

■ ஒருவர் சொன்னது —
கிறிஸ்தவ வாழ்வு என்பது இன்னலில் **இருந்து** தப்பும் வழியல்ல;
அதின் **வழியே** செல்லும் பாதை.

ஆம், துன்பத்தைப்போல் நம்மைப் பலப்படுத்துவது எதுவுமில்லை!

கிறிஸ்தவ வாழ்வின் துவக்கத்திலேயே புது விசுவாசிகளின்
மனதில் இச்சத்தியத்தைப் பதித்துவிடுவதில்
அப்போஸ்தலர் கவனமாயிருந்தனர் —
அப் 14:21,22 ... *அநேக உபத்திரவங்கள் ... திடப்படுத்தி ...*
வளர்ச்சிக்குக் குறுக்கு வழியில்லை!

■ வளர்ச்சிக்கும் பலப்படுத்தலுக்கும் இன்னல்கள் உதவியதற்கு
எடுத்துக்காட்டுகள் பைபிளில் நிறையவுண்டு —

☐ எகிப்தில் இஸ்ரவேல் மக்கள்
யாத் 1:12 ... *வேலை வாங்குவோர் ... ஒடுக்கினர் ... பெருகினர்*

☐ துன்பத்தில்தான் யோசேப்பு கனி தருவதில் வளர்ந்தான்.
கனி மரத்திற்குத்தான் கல்லெறி!
ஆதி 49:22-24 ... *கனி தரும் செடி ... எய்தார்கள் ... பகைத்தார்கள்*

இறைவார்த்தை அவனில் ஆழமாய்ச் செயல்பட
இது ஒரு சாதகமான வாய்ப்பாய் மாறிற்று —
சங் 105:17-19 ... *இரும்புச் சங்கிலி ... வசனம் புடமிட்டது*

☐ சிங்கத்தையும் கரடியையும் மேற்கொண்டது தாவீதுக்குக்
கோலியாத்தின்முன் வீரதீர விசுவாசம் தந்தது —
1 சாமு 17:34-37

வளருவதும் பலப்படுவதும் எப்போதும் படிப்படியாகத்தான்.

ஒரு சங்கடம் இன்னொன்றைச் சந்திக்க நம்மைப் பலப்படுத்துகிறது.

— அமலேக்கியரின் படையெடுப்பு (1 சாமு 30:1,6)
*''தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்''* —
முந்திய வெற்றிகளின் நினைவுடன்

☐ யோபு — முதலில் உடைமைகள், சுகம், பிள்ளைகளை இழந்தான்;

இந்தப் பரீட்சையில் அசையாது நின்றான்.
பின்னர் அவனது அறிக்கை —
*''அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் ...''* (யோபு 13:15)

கொடுமையிலும் கொடுமையைச் சந்தித்த யோபு
வளரும் கலையைக் கற்றவனாய் வெளிவந்தான் —

யோபு 17:6-9 ... *பழமொழி ... அருவருப்பு ... சஞ்சலம் ... மென்மேலும் பலத்து ...*

☐ அப்போஸ்தலன் பவுல்

ஆசியாவில் பட்ட பாடு விசுவாசத்தைப் பலப்படுத்திற்று.
2 கொரி 1:8-10 ... *உபத்திரவம் ... மிஞ்சிய பாரம் ...*
அதாவது, மரணத்தினின்று **தப்புவிப்பது** மட்டுமல்ல,
உயிரோடும் **எழுப்பும்** தேவ வல்லமையில் விசுவாசம்!

☐ எனது வாழ்விலும், கண்ணீரின் பாதையிலேயே
கணிசமான வளர்ச்சி!

■ இச்சத்தியத்தைக் குறித்த **எடுத்துக்காட்டுகள்** மட்டுமல்ல,
திடமான **போதனையையும்** வேதம் தருகிறது:

— சங் 84:4-7 ... *அழுகையின் பள்ளத்தாக்கு ... பலத்தின்மேல் பலம்*

— ஏசா 30:20,21 ... *துன்பத்தின் அப்பம் ... கண்கள் ... போதகர்கள் ...*

இக்கட்டுக் காலங்களில் நமது வேத அறிவில்
புதிய வெளிச்சமும் விளக்கமும் கிடைக்கிறது.

நமது கண்கள் கண்ணீரால் கழுவப்படும்போது
தேவனது வழிகள் இன்னும் தெளிவாய்த் தெரிகின்றன!

— ரோ 5:3,4
*உபத்திரவம் ⏩ பொறுமை ⏩ பரீட்சை ⏩ நம்பிக்கை*
''பிசைந்த மாவு'' போன்று பக்குவமடையும் குணநலன்!

— 2 கொரி 1:5 ... *''பாடுகள் பெருகுகின்றன ... ஆறுதல் பெருகிற்று''*

பாடுகள் கூடக் கூட

நமது *உள்ளான மனிதன்* பலப்பட்டுக்கொண்டே போகிறான்.

— 2 கொரி 4:16

துன்பங்கள் நமது *புறம்பான மனிதனை* உருக்கிவிடலாம்;

*உள்ளான மனிதனோ ''நாளுக்கு நாள்''* உருவேற்பான்!

— இதுவே கடவுள் நம்மைச் சிட்சிப்பதின் நோக்கம்

எபி 12:11 ... ''அதில் பழகினவர்களுக்கு ...

*நீதியாகிய பலன் தரும்''*

கனி கொடுக்கும் கொடியைத்தான் இன்னும் அதிகக் கனி கொடுக்க ஆண்டவர் நறுக்கிச் சுத்தம்பண்ணுகிறார் — யோ 15:2ஆ

— 2 தெச 1:3,4

*விசுவாசம் பெருகுகிறது ... அன்பு அதிகரிக்கிறது ...* பாடுகள்

— யாக் 1:2-4 ... *பலவித சோதனைகள் ⏩ பொறுமை ⏩ பூரணம்*

■ ஞானிகளின் கூற்றுகள் —

☐ அலெக்சாண்டர் மக்லாரன் (1826-1910)

''கல்லும் முள்ளுமான பாதையில் ஆண்டவர் நம்மை நடத்தினால் பலமான காலணிகளையும் தருவார்!''

☐ ஜான் பனியன் (1628-1688, வியாக்கியானப் பிரசங்க வேந்தன்)

''சிம்சோனுக்கு எதிர்ப்பட்ட சிங்கம்போல் இன்னல்கள் தோன்றலாம் — கர்ஜிக்கலாம், பற்கடிக்கலாம் — அதை மேற்கொண்டுவிட்டாலோ, தேன்தான்!''

■ மரத்தின் வேரைத் தவிர எல்லாவற்றையும் அழித்துவிடும் நெருப்பாய் நமது இன்னல்கள் இருக்கலாம்; ஆனால் —

ஏசா 11:1 ... *அடிமரத்திலிருந்து ஒரு துளிர்* தோன்றச் செய்வார்

53:2அ ... *வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கும் வேர்*

■ **முடிவுரை**

சிப்பிக்குள் இருக்கும் உயிரியை உறுத்திக்கொண்டே இருப்பதுதான் முத்தாக மாற்றி வளரச்செய்யும்.
வாழ்வின் தடைக்கற்களைப் பார்த்து அதிர்ந்துவிடாதீர்!
தடைக்கற்கள் படிக்கற்களாகும்; அவை உந்து பலகைகளாகும்!
இன்னல்களைச் சரியாய்க் கையாண்டால்
அது வளர்ச்சியைக் கூட்டும், குறைக்காது!

■ எசேக்கியா பிரான்சிஸ் (1952- ) அவர்களது பாடல்:

*யேகோவா நிசி, யேகோவா நிசி,*
*யேகோவா நிசியை, யேகோவா நிசியை யேற்றிப்பாடுவோம்;*
*எங்கள் கொடி வெற்றிக் கொடியே!*

*வீறு கொண்டெழுவீர் இயேசு வீரரே*
*மாறு கொண்டு மன்னர் முன்னே செல்கிறார்;*
*சீறியெழும் சிங்கங்கள் நாம் அல்லவோ?*
*மீறுமெதிரி சதிகளுக்கு மிரளவோ?*
*யூத சிங்கம் யுத்த சிங்கமே!*

## 7. கூட்டு வளர்ச்சியை அலட்சியப்படுத்தக்கூடாது.

Do not ignore corporate growth.

- இன்று தனியுரிமைக் கலாச்சாரம் உச்சத்தை எட்டியுள்ளது.

  ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதைவிடத்
  தன்னிச்சையாய் வாழவே எங்கும் நாட்டம்.

  பைபிள் தரும் அறிவுரையோ —

  1 கொரி 10:24 ... *தன்னுடையதல்ல, பிறரது நலன்* ...

- கூட்டு வளர்ச்சி நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல;
  ஏனெனில் ''தனி'' வளர்ச்சியும், ''கூட்டு'' வளர்ச்சியும்
  பின்னிப் பிணைந்தவை —

  குறிப்பாக, தனி வளர்ச்சி தன்னில்தானே நிறைவடைய முடியாது.

  — கிறிஸ்துவின் *''சரீர'' வளர்ச்சி* குறித்து வேதம் அடிக்கடி
  பேசுகிறது —

  எபே 4:14-16 ... *இனிக் குழந்தைகளாயிராமல் ...*
  *உடல் முழுவதும்... சகல கணுக்களும்... ஒவ்வொரு அவயவமும்*

  — இன்னொரு ஒப்புமை: ''கட்டிடம்''

  எபே 2:19-22 ... *மாளிகை முழுவதும் ... ஆலயமாய்* ***எழும்புகிறது***

  — நடைமுறைச் சூழல் ஒன்றில் பவுல் இதை விளக்குகிறான்:

  1 கொரி 14:29-31 ... *எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லவும்*
  ... *எல்லாரும் கற்கவும்*
  ... *எல்லாரும் தேறவும்*

  இந்த மனப்பான்மை நிலவாவிட்டால்,
  அதைக் ''குழந்தைத்தனம்'' என்று பவுல் அழைக்கிறான் —

  1 கொரி 14:18-20 ... *அன்னிய பாஷை... சபையில்... குழந்தைகள்*
  13:11 ... *நான் குழந்தையாயிருந்தபோது ...*

(உ-ம்) இயேசு தமது வரங்களை பிறர் நலனுக்காவே பயன்படுத்தினார்.
தமது பசியாற்ற கற்களை அப்பங்களாக்கவில்லை;
ஆனால் அப்பம் மீனைப் பிறர்க்காய்ப் பெருக்கினார்.

- தனிப்பட்டவரது வளர்ச்சி பெரும்பாலும் *''விசுவாசத்தை''* அடுத்தது; கூட்டு வளர்ச்சியோ *''அன்போடு''* தொடர்புடையது.

  ஒன்று செங்குத்துப் பரிமாணம்;
  அடுத்தது சமதளப் பரிமாணம்.

  முதலாவதைவிட இரண்டாவது நமக்குக் கடினமாயிருக்கிறது. திருமறையோ திரும்பத் திரும்ப *''விசுவாசத்தோடு''* *''அன்பை''* இணைக்கிறது.

  1 தெச 3:10,12 ... *உங்கள் விசுவாசக் குறைவுகளை நிறைவாக்கி ...*
  எப்படி? *''அன்பில் பெருகுவதால்''* (வச 12)

  2 தெச 1:3 ... *விசுவாசம் வளருகிறது ... அன்பு பெருகுகிறது ...*

  *''துர்க்குணம், புறங்கூறுதலை''* விடவில்லையெனில்,
  திருவசனப் பால் குடித்தாலும் வளர முடியாது (1 பேது 2:1-3)

- புதிய சபையினர் ''வளருவதற்காகவே'' நிருபங்கள் எழுதப்பட்டன. *''ஒருவருக்கொருவர்''* எனும் பகுதிகளால் அவை நிறைந்துள்ளன —

  *ஒருவரையொருவர் கனம்பண்ணுங்கள்* (ரோ 12:10)
  *ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்* (ரோ 15:7)
  *ஒருவரோடொருவர் ஒருமனதாயிருங்கள்* (ரோ 12:16)
  *ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்* (ரோ 15:14; எபி 3;13)
  *ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்* (ரோ 16:16)
  *ஒருவருக்கொருவர் உதவுங்கள்* (1 பேது 4:10)
  *ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்திடுங்கள்* (கலா 6:2)
  *ஒருவரையொருவர் அன்பினால் தாங்குங்கள்* (எபே 4:2)
  *ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்* (எபே 5:21)
  *ஒருவரையொருவர் தேற்றுங்கள்* (1 தெச 5:11)
  *ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்குங்கள்* (ரோ 14:19)

கூட்டு வளர்ச்சிக்கான கரிசனை சிறப்பாகப் பலங்குன்றியவர்களிடம் காட்டவேண்டும் —

ரோ 15:1,2 ... *பலவீனரைத் தாங்க ... பிறர்க்குப் பிரியமாய் ...*

(உ-ம்) மனைவிமார் *''பலவீனப்'' பாத்திரங்களாம்* (1 பேது 3:7)
அவர்கள் வளர கணவன்மார் கைகொடுக்கவேண்டும் —
எபே 5:28,29 ... *''போஷித்துக் காப்பாற்றி ...''*

திருச்சபை ஒரு ''குடும்பத்திற்கு'' ஒப்பிடப்பட்டுள்ளது;
ஒவ்வொரு குடும்பமும் அதின் அங்கத்தினரின்
வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் உழைக்கவேண்டும் —

பெற்றோர் ↔ பிள்ளைகள்
சகோதரர் ↔ சகோதரிகள்
கணவன்மார் ↔ மனைவிமார்
முதியவர் ↔ இளைஞர்

இவ்விதக் குடும்பம் பரலோகின் முன்ருசி!
சகிப்பு, ஏற்பு, மன்னிப்பு, தன்னல மறுப்பு, விட்டுக்கொடுப்பு,
ஒருமித்திருப்பு ஆகியவற்றில் வளர குடும்பச் சூழல் ஒரு வாய்ப்பு.

■ கடவுளது அன்பைப் புரியவும் கூட்டுவாழ்வு உதவுகிறது —

எபே 3:18,19... *சகல பரிசுத்தவான்களோடும் ...*
*''அகலம்''* ... தேவனது அணைத்துக்கொள்ளும் அன்பு
*''நீளம்''* ... தேவனது வியப்பிற்குரிய பொறுமை
*''ஆழம்''* ... தேவனது முழுமையான மன்னிப்பு
*''உயரம்''* ... தேவனது உன்னதத் தியாகம்

தேவனது *அன்பின்* இந்த நான்கு பரிமாணங்களைப் புரிவது,
இப்பாணியிலேயே பிறரை நேசிக்க நம்மை ஊக்குவிக்கிறது.

■ ''தனி'' வளர்ச்சியையும் ''கூட்டு'' வளர்ச்சியையும்
திருப்பாடகன் சேர்த்துப் படம் பிடித்துள்ளான் —

சங் 92:12 ... *பனை மரம்* ... (தனித்து வளர்தல்)
:13 ... *இல்லம் ... முற்றங்களில்* ... (கூட்டாக வளர்தல்)

- ''தனிப்பட்ட'' கிறிஸ்தவர்கள் ''உள்ளூர்ச்'' சபைகளின் ''கூட்டு'' வளர்ச்சிக்காய் உழைக்கவேண்டியதுபோல, உள்ளூர்ச் சபைகளும் ''உலகளாவிய'' திருச்சபை மற்றும் இறையரசின் நலனுக்காய்க் கரிசனை கொள்ளவேண்டும்.

  இப்படித்தான் உள்ளூர்ச் சபைகள் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளலாம்.

  (உ-ம்) உள்ளூர்ச் சபை வளர்ச்சி: அயலக நற்செய்திப்பணி மூலம்
  உலகளாவிய சபை வளர்ச்சி: தொலைவிட மிஷனரிப்பணி மூலம்

- இதுதான் ஆண்டவர் தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் ஏறெடுத்த அவரது வாஞ்சையை நிறைவேற்ற உதவும் —

  யோ 17:20-23 ... *ஒன்றாய் ... மகிமை ... தேறினவர்களாய் ...*

  *''இவர்களுக்காக''* — உள்ளூர்
  *''இவர்கள் மூலம் விசுவாசிப்போருக்காக''* — அடுத்தடுத்த ஊர்கள்
  *''உலகம் உம்மை விசுவாசிக்கும்படியாக''* — உலகளாவியது

(பார்க்க: பக்கங்கள் 59-61, 350-351, 380-384, 517-519, 546-549, 642-646)

## 8. அளவுக்காகத் தரத்தைத் தியாகம்பண்ணக்கூடாது.

Do not sacrifice quality for quantity.

■ ''தனிப்பட்ட'' வளர்ச்சியோ ''கூட்டு'' வளர்ச்சியோ
ஓர் அடிப்படையான பாடமிது.

வளரவேண்டுமென்ற ஆர்வத்திலும் ஆத்திரத்திலும்
தரத்தைத் தியாகம் செய்வது இயல்பு.
இந்தப் போக்குக்கு எதிராய் விழிப்புடனிருக்கவேண்டும்.

■ இப்படிப்பினையை முதலாவது **''தனி''** வளர்ச்சியில்
அப்பியாசிப்போம் —

கிறிஸ்தவ வாழ்வில் வளர்தல் என்பது
''கர்த்தரை அறிகிற அறிவில்'' வளர்தல் என்றாலும்,
தேவ பயமில்லாத அறிவுப் பெருக்கம் பயனற்றது —

பிர 12:12-14 ... *அநேகப் புத்தகங்கள் ... தேவனுக்குப் பயந்து ...*
நீதி 1:7அ ... *கர்த்தருக்குப் பயப்படுதல் ... ஞானத்தின் ஆரம்பம்*

இங்குதான் உலகின் மிகப் பழமையான தவறு நடந்தது —

கடவுளுக்குக் கீழ்ப்படிதலைவிட மனிதன் ''அறிவையே'' நாடினான் —

ஆதி 2:9 ... **முதலாவது,** *வாழ்வு தரும் மரம்*
அடுத்ததுதான், *நன்மை தீமை அறிய உதவும் மரம்*

மனிதன் இந்த வரிசையை மாற்றியபோது,
எல்லாம் இழந்தான் — ஆதி 3:24

■ தேவ பக்தியின் நாட்டமில்லாது வளர்வதில் ஆர்வம்
காட்டுவதைப் பழம் தீர்க்கர்கள் எச்சரித்துள்ளனர் —

எரே 12:2 ... *வளருகிறார்கள் ... உள்ளங்களோ தூரம் ...*
மல் 4:1 ... *அக்கிரமக்காரர் ... சுட்டெரிப்பு*
:2 ... *என் நாமத்திற்குப் பயந்திருக்கும் நீங்கள் வளருவீர்கள்!*

எனவேதான் சாலொமோன் இவ்விதம் ஞானமாய் எழுதினான் —

நீதி 9:9ஆ ... ***நீதிமானுக்கு*** *உபதேசம்பண்ணு ...*

*அறிவில் விருத்தியடைவான்*

:10ஆ ... ***பரிசுத்தரின்*** *அறிவே அறிவு*

- உபதேசத்தைக் குறித்த அறிவும்கூட,
தனிப்பட்ட வாழ்வில் பரிசுத்தத்திற்கு நடத்தாவிடில், பயனற்றது —

1 தீமோ 6:3 ... *தேவ பக்திக்கேற்ற உபதேசம்*

2 தீமோ 3:10 ... *என் போதகம் ... என் நடக்கை*

எபேசு சபையின் குறைபாடு இதுதான் —

வெளி 2:2-4 ... உபதேசத்திலும் செயல்பாடுகளிலும் செழிப்பு,

ஆனால் *ஆதி அன்பு* இழப்பு

அன்பில்லா அறிவை அப்போஸ்தலன் பவுல்
வன்மையாய்க் கண்டிக்கிறான் —

1 கொரி 8:1இ ... *அறிவு இறுமாப்பை உண்டாக்கும்!*

அதாவது, அன்பற்ற அறிவு.

இது மற்றவர்களுக்குப் பயனளிக்காது (வச 11)

ஆம், இதய அனுபவமற்ற வெறும் தலையறிவு
தரம் இல்லாத அளவுப் பெருக்கமாம்.

- கூடுதல் ஆசீர்வாதங்களைப் பெறுவது வளர்ச்சியின் அடையாளமல்ல; நிறைவையும் குறைவையும் வெற்றிகரமாய்க் கையாளப் பழகுவதே உண்மையான ‘‘முதிர்ச்சி’’ ஆகும் —

பிலி 4:12,13 ... *வாழ்ந்திருக்கவும் தாழ்ந்திருக்கவும்*

*கற்றுக்கொண்டேன்*

- வாழ்விலும் பணியிலும் வெற்றியுள்ளோரது வாழ்வின் ஒழுக்க முறைகளைக் கற்காது, வெறுமனே அவர்களைக் காப்பியடிப்பது உள்ளத்தில் உண்மையில்லாத வெளிப்புறப் பகட்டென்னும் ஆபத்தில் முடிவடையும்.

பக்தியுள்ள மனிதரின் நெடுங்கால ஆன்மீக நடக்கையை
வெறுமனே காப்பியடித்துப் பயனேதுமில்லை.

வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி (1662-1714) சொன்னது —

''வெளியே தெரியாத வேர்களின் வளர்ச்சி போன்றதே
பெருமளவிலான ஆன்மீக வளர்ச்சி!''

வளர்ச்சி என்பதில் இரு அம்சங்கள்:

(அ) மறைவான வளர்ச்சி

(ஆ) வெளிப்படையான வளர்ச்சி

மறைவான வளர்ச்சி இருக்கும்போதுதான்
வெளிப்படையான வளர்ச்சி நிசமானதாயிருக்கும்.

இவ்வித வளர்ச்சியே ''தரமும் அளவும்'' நிறைந்தது.
இல்லையேல், *''நீரற்ற மேகங்கள் ... கனியற்ற மரங்கள்''* (யூதா 12,13)

■ அடுத்து, இச்சத்தியத்தைக் **''கூட்டு''** வளர்ச்சிக்குக் கவனிப்போம்—
''திருச்சபை வளர்ச்சி'' என்பது கிறிஸ்தவ வட்டாரங்களில்
இன்று அதிகம் பயன்படுத்தப்படும் சொற்கள்.

பொதுவாக இங்கு மக்கள் குறிப்பிடுவது ''எண்ணிக்கை'' பெருக்கமே.

சபை வளர்ச்சிக்குப் பாடப் புத்தகமாகிய அப்போஸ்தலர் நடபடிகளோ
''எண்ணிக்கை'' வளர்ச்சியையும் ''ஆன்மீக'' மேம்பாட்டையும்
இணைத்தே பேசுகிறது —

☐ அப் 2:41 ... *3000 பேர் சேர்க்கப்பட்டனர்*
:42 ... *உறுதியாய்த் தரித்திருந்தார்கள்*

☐ அப் 4:4 ... *5000 என்று பெருகினர்*
:32 ... *ஒரே இருதயம், ஒரே மனம்*

☐ அப் 6:1 ... *சீடர் தொகை பெருகியது*
:2-6 ... *பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது*
:7 ... *சீடர் தொகை மிகவும் பெருகிற்று*

- ☐ அப் 9:31 ... *பக்திவிருத்தியோடு ... பெருகின*
- ☐ அப் 11:21 ... *அநேகர் கர்த்தரிடம் திரும்பினர்*

  :22,23 ... *நிலைத்திருக்கும்படி ஊக்குவிப்பு*

  :24 ... *இன்னும் அநேகர் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டனர்*
- ☐ அப் 14:21 ... *அநேகரைச் சீடராக்கி ...*

  :22 ...*திடப்படுத்தி... புத்தி சொல்லி... அநேக உபத்திரவங்கள்*
- ☐ அப் 16:5 ... *விசுவாசத்தில் திடப்பட்டு,*

  **அத்துடன்** *நாளுக்கு நாள் பெருகின*
- ☐ அப் 17:11 ... *பெரோயர் தினமும் ஆராய்ந்துபார்த்தனர்*

  :12 ... ***அதனால்*** *அநேக சீமான்களும் சீமாட்டிகளும் விசுவாசித்தனர்*

இது கிறிஸ்துவின் பேராணையில் சொல்லப்பட்டதுபோலவே —

மத் 28:19,20 ... *சீடராக்கி ... உபதேசம்பண்ணுங்கள்*

இதுதான் தேவனது கீழ்க்கண்ட வார்த்தைகளின் பொருள் —

*''நீளமாக்கு''* **அத்துடன்** *''உறுதிப்படுத்து''* (ஏசா 54:2)

- ■ தரத்தைக் கவனியாது, அளவில் மட்டும் ஆர்வம் காட்டினால், கட்டிடப் பொருட்கள் நயமாய் இருக்காது —

  *''தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள்''*

  vs. *''மரம், புல், வைக்கோல்''* (1 கொரி 3:12,13)

''எவ்வகை'' என்பதைவிட ''எவ்வளவு'' என்றாகிவிடும்!
விரைவான பலன்கள், ஆனால் குறைவான தரம்!

இதுதான் மாற்றுகளுக்கு (substitutes) நடத்திவிடும் —

(உ-ம்) *''கல்லுக்குப் பதிலாகச் செங்கல்''* (ஆதி 11:3)

அதாவது, தெய்வீகத் தத்துவங்களுக்குப் பதிலாகச் செயற்கை முறைகள் (உ-ம்) கலப்பினத் தென்னங்கன்று (சீக்கிரம் காய்ப்பு, சீக்கிரம் ஓய்வு!)

■ **முடிவுரை**

எத்தனை ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ணியிருக்கிறோம்,
எத்தனைப் பிரசங்கங்கள் செய்திருக்கிறோம்,
எத்தனைப் புத்தகங்கள் எழுதியிருக்கிறோம்,
எத்தனை சபைகள் கட்டியிருக்கிறோம்,
என்பதை வைத்தல்ல,
எவ்வளவு இயேசுவைப்போல் மாறியிருக்கிறோம்
என்பதே ஆன்மீக வளர்ச்சிக்கு அளவுமானி!

எபே 4:11 ... *கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு ...*
2 கொரி 3:18 ... *சாயலிலிருந்து சாயலுக்கு ...*

■ ஆசிரியர் இயற்றிய ஓர் எளிய பல்லவி —

மெட்டு: அல்லேலூயா, அல்லேலூயா, ...

*இயேசு போல, இயேசு போல (2)*
*இயேசுவைப் போலாவேன் (3)*
*இயேசுவைப் போலாக்கும்!*

*Like Jesus, Like Jesus (2)*
*I would be like Jesus (3)*
*Lord, make me like Jesus!*

## 9. நேரான பாதையிலிருந்து வழிவிலகக்கூடாது.
Do not sidetrack.

- நமது வளர்ச்சியில் ஆண்டவர் கரிசனை கொண்டுள்ள அளவுக்குப் பிசாசும் பலவித கவனச் சிதறல்கள்,
  கவர்ச்சிகள் மூலம் நமது வளர்ச்சியை எதிர்க்கிறான்.

  இது கீழ்க்கண்ட வசனப்பகுதியில் தெளிவு —

  சக 3:1-5

  ... பிரதான ஆசாரியன் யோசுவாவின் சுத்திகரிப்பைச் சாத்தான் எதிர்த்தான்.

  நடைமுறையில் சொன்னால்,
  கிறிஸ்தவ வாழ்வின் துவக்கத்தில் நாம் வெறுத்தொழித்த பாவங்களைக் கண்டும் காணாமலும இருக்க சாத்தான் நம்மைத் தூண்டுகிறான்.

  இங்கு கவனமாயிராவிடில்,
  *''பரிசுத்தத்தைப்'' பூரணப்படுத்த* முடியாது — 2 கொரி 7:1

  விவசாயத் துறையிலிருந்தும் இதை விளக்கலாம் —
  விதைக்குமுன் வயலை உழுது ''கற்களைப்'' பொறுக்குகிறோம்;
  நாற்றுகள் வளரும்போது ''களைகளைப்'' பிடுங்கவேண்டும்.

  அதாவது, விதைக்குமுன் உழுதல்;
  வளரும்போது களையெடுத்தல்!

- பழைய **பாவங்கள், இச்சைகளில்** மறுபடி மாட்டிக்கொண்டால், நாம் முதிர்ச்சி நோக்கி வளர முடியாது —

  - ☐ 2 தீமோ 3:6,7 ... *எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை உணராதவர்*
  - ☐ இவைதான் திராட்சைத் தோட்டத்தை நாசமாக்கும் *''சிறுநரிகள்''*
    உன் 2:15 ... *பூவும் பிஞ்சுமாய் இருக்கின்றன*
  - ☐ ''பழைய பாவங்களுக்குத்'' திரும்பிவிடக்கூடாதென்ற எச்சரிப்பு அடிக்கடி திருமறையில் வருகின்றது —

எண் 11:4,5 ... *எகிப்து ... மீன் ... வெங்காயம் ... பூண்டு ...*

அவர்கள் அசைவ உணவை விரும்பியதற்குத் தேவன் எதிரல்ல;
அவர் கொடுத்த *''மன்னாவில்''* திருப்தியடையாததுதான் தவறு (வச 6)
... அவர்களுக்கு அது சலிப்பாயிருந்தது!

இதற்கு ஆவிக்குரிய அர்த்தம் இதோ —
1 கொரி 10:6 ... *அவர்கள் இச்சித்ததுபோல் இச்சியாதபடி ...*

நாயின் வாந்தியும் பன்றியின் சேறும் இதற்கு ஒப்புமை —
2 பேது 2:20-22 ... *''பின்னிலைமை ... முன்னிலைமை''*

□ இவ்விதப் பின்மாற்ற நிலையில் வளர்ச்சி நின்றுவிடுகிறது.
ஆனால் நாம் மனந்திரும்பினால் (ஓசி 14:1அ),
மறுபடி *''வீரிய''* வளர்ச்சியைத் தேவன் வாக்களிக்கிறார் —
ஓசி 14:4-7 ... *பனி ... மலரும் ... வேரூன்றி ... படரும்*

□ இங்கு கவனமாயிராவிடில், நமது ஊழியம் வளரலாம்,
வாழ்விலோ வளர்ச்சியை அனுபவியோம்.

''எனது குணத்தைவிட எனது ஊழியம் வளர்ந்துவிட்டது''
என்று அறிக்கையிட்டு, ஓர் உத்தம ஊழியர்
ஊழியத்தைக் கொஞ்சக்காலம் ஒதுக்கி வைத்தார்.

இன்னும் வளரவேண்டிய அவசியத்தைக் காணக்கூடாதபடி
ஊழிய வெற்றிகள் அடிக்கடி நமது கண்களைக் குருடாக்குகின்றன.

■ வழிவிலகல் ஏற்படக்கூடிய இன்னொரு பகுதி:
ஆன்மீகச் சிந்தையிலிருந்து **உலகச் சிந்தைக்கு** இறங்குதல் —

□ குறிப்பாக இதற்கு எதிராக அப்போஸ்தலன் பவுல்
பிலிப்பிய விசுவாசிகளை எச்சரித்தான்:
பிலி 3:13-16 ... *முன்னானவைகளை நாடி ...தொடர்ந்து ...*
*தேறினவர்கள் ... ஒரே சிந்தை ...*
*''வேறே சிந்தையாயிருந்தால்''* (வச 15)
அதாவது, உலகச் சிந்தை (வச 18,19)
*நமது குடியிருப்பு ... மகிமையான உடல் ...*
''பரலோகச் சிந்தைக்குப்'' பவுல் அழைக்கிறான் (வச 20,21)

வளவாழ்வு உபதேசத்தில் மாட்டிக்கொள்பவர்கள்
பொதுவாக அதிகம் வளர்வதில்லை.

(உ-ம்) தேமா (2 தீமோ 4:10) ... *"இப்பிரபஞ்சம் ..."*
அவனால் பவுலோடு முன்செல்ல முடியவில்லை.

☐ கொரிந்து விசுவாசிகளுக்கும் பவுல்
இவ்வித எச்சரிப்பு விடுத்தான் —
1 கொரி 15:33...*ஆகாத சகவாசம் நல்லொழுக்கம் கெடுக்கும்*
அதாவது, உலக மயக்கத்திலிருப்போரோடு ஐக்கியம்
வச 32 ... *எபேசுவிலுள்ள கொடிய மிருகங்கள்*
*"மிகவும் பரிதபிக்கத்தக்க"* நிலை —
வச 19 ... *இம்மைக்காக மட்டும் ...*

☐ முட்களால் நெருக்கப்படாது இருந்தால்தான் செடி நன்கு வளரும் —
மத் 13:22 ... *உலகக் கவலை ... செல்வத்தின் மயக்கம்*

எனவேதான் சங்கீதப் புத்தகம் இந்த எச்சரிப்புடன் துவங்குகிறது —
சங் 1:1 ... *துன்மார்க்கர் ... பாவிகள் ...கேலிக்கூத்தர்*
:3 ... *ஆற்றோர மரம் ... கனி ... இலைகள்*

■ வழிவிலகலுக்கு மூன்றாம் காரணம் **உபதேசக் குளறுபடி** —

☐ கலா 5:7 ... *நன்றாய் ஓடினீர்களே ... வஞ்சித்தது யார்?*

சூழமைவு: பிரமாணத்திலிருந்து கிருபைக்கு வந்தோர்
திரும்பப் பிரமாணத்திற்குச் சென்றனர் —
வச 1,4 ... *நுகம் ... கிருபையிலிருந்து விழுந்தீர்கள்*

இது கள்ளப் போதகர் மூலம் ஏற்பட்டது (2:4)
— விநோதமான, நவீன உபதேசங்களுக்கு எச்சரிக்கை!
— கேள்விக்குரிய முறைகள், அனுபவங்களுக்கு எச்சரிக்கை!
— திருமறைக்குக் கூடுதலான வெளிப்பாடுகளுக்கு எச்சரிக்கை!

பேதுரு கொடுத்த கடைசி எச்சரிப்பு இதுதான் —

2 பேது 3:17,18 ... *வஞ்சகத்தில் இழுப்புண்டு ...*
*கிருபையில்* ***வளருங்கள்''***

- ☐ கிறிஸ்தவத்திற்குள்ளேயுள்ள உபதேச மாறாட்டங்கள் மட்டுமல்ல; வெளியுலகிலுள்ள ஏமாற்றும் தத்துவங்களும் —

கொலோ 2:6-8 ... *வேர் கொண்டு ... கட்டப்பட்டு ...*
*''கிறிஸ்துவைப் பற்றியவை அல்ல''* —
கிறிஸ்துவை உட்படுத்தாத தத்துவங்கள்
*தேவத்துவத்தின் பரிபூரணம் அவருக்குள்தான்* (வச 9)

- ☐ ஒரே உபதேசத்தையே வலியுறுத்துதலும் வளர்ச்சியைத் தடுக்கும் —
கொலோ 2:18 ... *தலையைப் பற்றிக்கொள்ளாமல் ...*

(உ-ம்) ஞானஸ்நானத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருத்தல் ...
அன்னிய பாஷை பற்றியே பேசிக்கொண்டிருத்தல் ...
தெய்வீக சுகம் பற்றியே பேசிக்கொண்டிருத்தல் ...
பிரிந்து வாழ்தல் பற்றியே பேசி முடிவில் ஒதுங்கி வாழ்தல்

வளர்ச்சியெல்லாம் *''தலையாகிய கிறிஸ்துவுக்குள்தான்,''*
வேறே ஏதோ ''ஒன்றுக்குள்'' கூடாது — எபே 4:15,16

- ☐ *''மறைவான''* காரியங்களில் ஆர்வங்காட்டுதலும் முன்னேறவும் வளரவும் முடியாதபடித் திசைதிருப்பும் —

கொலோ 2:18,19 ... *காணாதவைகளில் நுழைந்து ... வளர்ச்சி*

மறைவானவை கர்த்தருக்கே உரியவை —
உபா 29:29
*''சாத்தானின் ஆழங்களுக்குள்''* போய்விடாதபடி எச்சரிக்கை —
வெளி 2:24 ... தியத்தீரா சபை

- ■ நம்மை வழிவிலகாது காக்கத் திருவாக்கு —

ஏசா 30:21 ... *இடது புறமோ வலது புறமோ சாயும்போது ...*
பரிசுத்த ஆவியானவரின் சத்தம் மூலம்
பரிசுத்த வேதத்தின் வார்த்தை மூலம்

## 10. வளருவதை ஒருபோதும் நிறுத்தக்கூடாது.

Do not ever stop growing.

- கிறிஸ்தவ வாழ்வில் திருப்தி என்பது நம்மைத் தேக்க நிலைக்கே கொண்டுசெல்லும்.

  ஒருவர் இப்படிச் சொன்னார்:

  ''முன்னேற்றத்திற்கான இடமே உலகில் மிகப்பெரிய அறை!''

  "The biggest room in the world is the room for improvement!"

  எனவே வேதம் நம்மை இப்படி அழைக்கிறது —

  *''முடிவு வரை அதே கவனத்தைக் காட்டவேண்டும்''*

  எபி 6:11,12 ... ஓட்டத்தின் நடுவில் *''அசதியாவதற்கு''* வாய்ப்பு!

  எனவேதான் வேதம் இப்படிச் சொல்லுகிறது —

  ''ஒரு காரியத்தின் *துவக்கத்தைவிட முடிவே* முக்கியம்'' (பிர 7:8)

- அப்போஸ்தலன் பவுல் இங்கு பெரும் சவால் —

  பிலி 3:12-16 *''அடைந்தாயிற்று என்றல்ல ... தொடர்கிறேன்''*

  இதை ஏறத்தாழ தனது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் எழுதுகிறான்.

  ரோம் நகரில் ஈராண்டு வீட்டுச் சிறையடைப்பின்போதுதான் பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்டது!

  *''உடலை விட்டுப் பிரிந்துபோக''* விருப்பமும் இருந்தது — பிலி 1:23

  இந்தக் காலக்கட்டத்திலும்கூட வளர்ந்துகொண்டேயிருந்தான் —

  *''பின்னானவை ... முன்னானவை ... மேலானவை''*

- இவ்வித வளர்ச்சியை அப்போஸ்தலன் யோவானும் குறிப்பிடுகிறான் — 1 யோ 2:12-14

குழந்தைப் பருவம் ... வாலிபப் பருவம் ... தந்தைப் பருவம்

| Childhood | Youthhood | Fatherhood |
|---|---|---|
| (மன்னிப்பு) | (வெற்றி) | (அறிவு) |

வயதாக வயதாக இளமைப் பருவத்தின் துடிப்பை இழந்துவிடக்கூடாது —

சங் 92:12-15 ... *முதிர் வயது ... **இன்னும்** கனி தந்து ...*
*... செழுமையும் ... பசுமையுமாய் ...*

- மக்கள் தாங்கள் வளருவதை நிறுத்துவதற்குப் பிரதான காரணங்கள் —

☐ சராசரி நிலையில் திருப்தி:

A.W. டோசர்: ''சராசரியாயிருக்க மறுத்துவிடு!''
எப்பொழுதும் நேர்த்தியாயிருக்கவே நாடவேண்டும்.

(உ-ம்) பவுல்: அவனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும்
அவன் மனது முதன்மையையே நோக்கியது:

— யூத மார்க்கத்தின் பயிற்சியில்
கலா 1:14 ... *என் வயதுள்ள அநேகரைவிட ...*

— தகுதியின்மையை உணர்வதில்
1 தீமோ 1:15 ... *பாவிகளில் பிரதான பாவி ...*

— சுய நீதியைக் களைதலில்
பிலி 3:4 (7,8) ... *மாம்சத்தில் நம்பிக்கை ... நான் அதிகம் ...*

— பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில்
எபே 3:8 ... *பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவன்*

— ஆன்மீக வரங்களை அப்பியாசிப்பதில்
1 கொரி 14:18 ... *உங்களெல்லாரிலும் அதிகமாய்ப் பாஷைகளை ...*

— ஆண்டவருக்காய் உழைப்பதில்
1 கொரி 15:9,10 ... *அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன் ...*
*அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்*

பாடுங்கள்: *''உசிதமானது உன்னதருக்கே!''*
*"Give of your best to the Master!"*

இன்னொரு காரணம் —

☐ பிறரோடு ஒப்பிடுதல்: 2 கொரி 10:12

முயல்-ஆமை கதை!

எனவேதான் இயேசு இப்படிச் சொன்னார் —

லூக் 13:30 ... *பிந்தினோர் முந்தினோராயும் ...*

சூழமைவு: தங்களது பரம்பரையைக் குறித்துப்
பெருமையடித்த எருசலேமியர் (வச 26-29)

வரிக்காரனுடன் தன்னை ஒப்பிட்ட பரிசேயனின்
பிரச்னை இதுதான் — (லூக் 18:11)

மேலும், வேதாகமக் கதாபாத்திரங்களின் தோல்விகளுக்குள் அடைக்கலம் புகுந்துவிடக்கூடாது — இப்படிக் கேட்காதீர் —

— ஆபிரகாம் பொய் சொல்லவில்லையா?
— மோசே எரிச்சல் அடையவில்லையா?
— தாவீது விபச்சாரம் செய்யவில்லையா?
— எலியா பயந்து ஓடவில்லையா?
— பேதுரு இயேசுவை மறுதலித்துச் சபிக்கவில்லையா?
— பவுல் சிறிய காரியத்திற்காய்ச் சண்டையிடவில்லையா?
— யோவான் ஒரு தூதனை வணங்கவில்லையா?

இந்தக் கதாபாத்திரங்களின் தோல்விகள் நமக்குச் **சாக்குகள்** அல்ல, எச்சரிப்புகள் (1 கொரி 10:11)

100 சதவீதம் பின்பற்றக்கூடியது இயேசு ஒருவரே!
அவரோடு மட்டுமே நமது வாழ்வை ஒப்பிடவேண்டும்.

நாம் வளருவதை நிறுத்துவதற்கு இன்னொரு காரணம் —

☐ தோல்விகளால் தொய்வு:

நீதி 24:16 ... *ஏழு தரம் விழுந்தாலும் எழுந்திருப்பான்*
தோல்வி எதுவும் முடிவானதல்ல;
தோல்வியடையாதவர் எவருமில்லை!

வளர்ச்சிக்காய் அப்போஸ்தலன் பவுலின் விதிமுறை:

பிலி 3:13 ... *பின்னானவைகளை மறந்து ...*

*முன்னானவைகளை நாடி ...*

சிலர் வேகமாய் வளருவர்; மற்றவர் அப்படி வளருவதில்லை.
வளர்ச்சி மெதுவாய் இருந்தாலும் நிறுத்தாதீர்.

ஒரு சீனப் பழமொழி:

மெதுவாய் வளருவதைக் குறித்துக் கவலைப்படாதே;
அப்படியே நின்றுவிடுவதைக் குறித்தே கவலைப்படு!

நிதானமாய், ஆனால் நிறுத்தாது, ஓடுபவரே வெற்றியடைவர்!

(The slow and steady win the race!)

வாழ்க்கையில் நெடுகவே ஏற்படும் மாற்றங்களே

நமது வளர்ச்சியை அளப்பவை.

கவர்ச்சிகரமாய் எதுவும் நடக்கவில்லையே என்று சோர்வுறாதீர்.
ஒட்டுமொத்தமான கணிப்பே அவசியம் —

2 கொரி 13:5 ... கிறிஸ்து உங்களில் இருந்தால்

நீங்கள் வளரத்தான் செய்வீர்கள்.

■ நமது வளர்ச்சிக்கான சில திருவாக்குகளைப் பார்த்து
இப்பாடத்தை நிறைவு செய்வோம் —

உபா 33:25ஆ ... *நாட்களுக்குத்தக்கதாய் பலம் ...*

யோபு 8:7 ... *அற்பமான துவக்கம் ... சம்பூரண முடிவு*

(இயேசு இதை ஆமோதித்தார்: *''கடுகு விதை''*)

நீதி 4:18 ... *அதிகமதிகமாய்ப் பிரகாசம்*

''நாளொரு மேனி, பொழுதொரு வண்ணம்''

பிலி 1:5 ... *தொடங்கியவர் ... முடிவு வரை நடத்துவார்*